# வேகவதி அணையான் தோத்திரம்.

## (ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த வேகாஸேது ஸ்தோத்ரம்)

### தமிழில் : பொய்கையடியான் ஸ்வாமிகள்



ஒளிவிளக்காகத்தானேத் தோன்றிய பெரும் சுடர் ,

புலப்படாது ஓடும் வேகவதி நதியின் நடுவிலும் ;

களிறு மலையின் மீதில் கருணையுடன் நின்றும் ,

பலனாயும், உபாயமாயும் இங்குகாணப்படுகின்றது . 1.

அழிவற்றதும், அசைக்கமுடியாததுமான இந்த அணை ,

அக்கரையென்னும் பரமபதத்தைச் சென்றடைவதற்கு ;

வழியாக விளங்கிடும் வல்லமையுடன் இருந்து ஒரு ,

அக்கரையுடன் தடைபட்டு இங்கேயேத் தங்கிவிட்டதோ ! 2.

வேகவதி என்ற ஆற்றின் நடுவினில் காணப்படுகின்ற ,

அணையாக அந்த எம்பெருமான் இங்கு தங்கியிருக்க ;

வேகமாக சுழன்றுவரும் சம்சாரக்கடலின் அலைகளை ,

துணையாக இருந்து அவற்றிலிருந்து காக்கின்றதோ ! 3.

வேகவதி ஆற்றின் நடுவே அழகுறப் பள்ளிகொண்டு ,

நான்முகனின் அச்வமேதயாகம் நடந்திடவேண்டியதன் ;

வேகத்தினைத் தடுத்து நிறுத்திய அந்த எம்பெருமான் ,

பாங்குடன் அடியேன் மனதிலும் தங்கிடவேண்டுகிறேன் . 4.

நதியின் வேகத்தினைத் தடுத்து வேள்விதனைக்காத்த,
இன்னதென்று சொல்லமுடியாத தொருகருணைகொண்ட;
கதியற்ற தம்முடைய பக்தர்களுக்கு வெள்ளமெனத் தாம்,
சொன்னவண்ணம் செய்தவனாய் இத்தலத்தில்காண்கிறேன். 5.

பெரியபிராட்டி உடன் இருக்க, நான்முகன் மனைவியினால்,
பணிவிடைச் செய்யப்பெற்றவனாய் அழகுற அநந்தன் மீதில்;
பெரிய காமவேட்கைக் கொண்டவனாய் இங்குபள்ளிகிடக்கும்,
கணிகண்ணனுக்காக மீண்டும் வந்தவன் மீளச்செய்வானாக. 6.

அயனது வேள்விக்கு அன்று நேர்ந்த ஆபத்தினை நீக்கியே,
அண்டிய பக்தர்களின் அன்பிற்க்கு நீர் அடிபணிந்தவனாய்;
அயராது நீலமணிபோல கிடக்கும் இந்த எம்பெருமானை,
அண்டியவர்களாக இன்று நாமெல்லோரும் இருக்கின்றோம். 7.

தஞ்சமென அடைந்தவர்களின் கட்டளைகளை உடனேஏற்று,
ஆறுதலாய் எல்லா உயிர்களின் துன்பங்களையும் துடைத்து;
குஞ்சரமலை மீதில் அருள்பாலிக்கும் அந்த எம்பெருமானுக்கு,
நூறுமடங்கு வரமளிக்கும் சக்திதனைப் பெருகச்செய்கின்றான். 8

கச்சிமண்டலத்தின் பாக்கியமே வடிவெடுத்து வந்த்து போன்று,
கமலத்தின் மீதமர்ந்தவளின் உள்ளப்பிரதிபலிப்பு போன்றவனாய்;
கருணையின் தொகுதியாய் எல்லா மங்களுக்கு உரைவிடமாய்,
கண்களுக்கு விருந்தாய் வேகாஸேது பெருமான் விளங்குகிறான் 9.

வேங்கடேஸக் கவியினால் அழகுற இயற்றப்பட்டதான இந்த,
வேகஅணையான் மீதான தோத்திரத்தைப் படிப்பவர்களுக்கு;
வேண்டிய வரங்களையெல்லாம் தம்முடைய பக்தர்களுக்கு,
வேண்டியபடியே இந்த எம்பெருமான் வழங்கி அருள்புரிவான். 10.